## (ஐ) விலைகளும் கூலிகளும்

### 1. விலைகள்

கொழும்பு நுகர்வோர் விலைக் குறிகாட்டியினுற்[1] காட்டப்பட்டவாறு 1972 இன் நுகர்வோர் விலைகள், 1971இன் 2.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும் போது 6.3 சதவீதம் அதிகரித்துக் காணப்பட்டன. கடந்த ஐந்தாண்டுகளின் விலைக் குறிகாட்டியின் சராசரி அதிகரிப்பானது 5.6 சதவீதமாகக் காணப்பட்டது.

1971 இன் கடைசிப் பகுதியில் விலைகளிலேற்பட்ட உயர்ந்துசெல்லும் போக்கு, 1972ஆம் ஆண்டு முழுவதிலும் தொடர்ந்து நிலவியது. இவ்விலை அதிகரிப்புக்குப் பல காரணிகள் இருந்தன. சில விடயங்களைப் பொறுத்தவரையில் நாணய மீள இணைப்புக்கள், உயர்வான கப்பற் கட்டணங்கள் என்பனவற்றுல் இறக்குமதிப் பொருட்களுக்கு நிலவிய உயர்ந்த விலைகள், உள்நாட்டுப் பொருட்களின் விலைகள் உயர்வடையக் காரணமாக அமைந்தன. பாதகமான காலநிலை காரணமாக உள்ளூர் உற்பத்தி விவசாயப் பொருட்களில் ஏற்பட்ட குறைவான நிரம்பல், விலைகளில் மேலும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. இறக்குமதிகள் சிலவற்றைக் கட்டுப்படுத்தியமையினுலும், சிலவற்றினை முற்ருக நிறுத்தியமையினுலும் ஏற்பட்ட நிரம்பற் பற்ருக் குறைவினை நிவர்த்தி செய்வதற்காக, உற்பத்தியினை அதிகரிப்பதன் பொருட்டு விலை ஊக்கப்பாடுகளை அளிப்பதற்காகப் பொருட்கள் பலவற்றின் விலைக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. இம்முக்கிய பொருட்களாவன, வெங்காயம், மிளகாய், தீப்பெட்டி, பற்பசை, சேட்டுக்கள், செயற்கைப் புடவைகள், மின்மப்பெருக்கி (ருன்சிஸ்ரர்) களினதும் ரோச் லைற்றினதும் பற்றரிகள், பத்து வகையான மருந்துகள் ஆகும். விலைக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பல பொருட்களின் நிரம்பல் மட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் அப்பொருட்களின் கேள்வியில் ஏற்பட்ட அமுக்கத்தின் உடனடி விளைவாக விலைகள் அதிகரித்தன.

அத்தியாவசியப் பண்டங்களின் சம அளவான பங்கீட்டு முறையைப் பாதுகாப்பதுடன் விலைகளிலேற்பட்ட தாக்கத்தினை ஓரளவு தளர்த்துவதற்காகவும் பல பொருட்களின் விலைக்கட்டுப்பாடும், பங்கீட்டு முறையும் 1972 இல் தொடர்ந்து நிலவின. ஆயினும் இறக்குமதிச் செலவுகள் உயர்ந்தமையினுலும் அல்லது உற்பத்திச் செலவு அதிகரித்தமையினுலும் அல்லது இவ்விரண்டின் காரணமாகவும் சில கட்டுப்பாட்டுப் பொருட்களின் விலைகள் சிறிது உயர்வான முறையில் மாற்றியமைக்கப்பட்டன.

#### (அ) கொழும்பு நுகர்வோர் விலைக் குறிகாட்டி

1972இல் எல்லா விடயங்களினதும் குறிகாட்டியானது, 1971இன் 2.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும்போது 6.3 சதவீதத்தினுல் அதிகரித்துக் காணப்

---

1. முன்னைய ஆண்டறிக்கைகளிலேயே சில்லறை விலைகளில் எற்படும் மாற்றங்களை அளப்பதற்கு இக் குறிகாட்டியைப் பயன்படுத்துவதிலுள்ள முக்கிய குறைபாடுகள் விளக்கப்பட்டுள்ளன.

முக்கிய குறைபாடுகள் பின்வருமாறு :

(1) கொழும்பு நகரில் வதியும் சராசரி தொழிலாளர் வகுப்புக் குடும்பத்தின் வாழ்க்கைச் செலவின மாற்றங்களையே அளவிட இவ்விலைக்குறிகாட்டி அமைக்கப்பட்டதனுல் பொது மட்டத்திலுள்ள விலைகளின் மாற்றங்களை அளவிடுவதற்கு இக்குறிகாட்டி போதியதாக அமையவில்லை.

(2) தொழிலாள வகுப்பின் நுகர்வுத் தன்மையில் கணிசமானளவு மாற்றங்கள் எற்பட்ட நிலையிலும் 1952இற்குப் பின் நிறைப்படுத்தல்கள் திருத்தியமைக்கப்படாததால் இவை காலங்கடந்தவையாகவே கருதப்படவேண்டும்.

(3) பற்ருக்குறைகள் காரணமாகப் பண்டங்களின் நிரம்பல் தளம்பியதன் காரணமாக வெளிச் சந்தையிலும் கட்டுப்படுத்தப்பட்ட சந்தைகளிலும் நிலவும் தொடர்பான விலைகளுக்குப் போதிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

பட்டது. துணைக் குறிகாட்டிகளான உணவு 6.0 சதவீதத்தினுலும், உடை 12.8 சதவீதத்தினுலும், எரிபொருள் வெளிச்சம் 3.6 சதவீதத்தினுலும், பல்வகை விடயங்கள் 6.2 சதவீதத்தினுலும் அதிகரித்தன. இவைகளின் குறிகாட்டிகள் 1971இல் முறையே 1.8 சதவீதம், 5.6 சதவீதம், 3.5 சதவீதம், 4.1 சதவீதம் கொண்ட தொடர்பான அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. முன்னைய ஆண்டுகளைப்போலவே, வாடகைக்கான துணைக் குறிகாட்டி மாற்றமுறாது இருந்தது.

அட்டவணை II (ஐ) 1

**கொழும்பு நுகர்வோர் விலைக் குறிகாட்டி**

(அடியாண்டு 1952=100)

| ஆண்டு | எல்லா விடயங்களும் | பண்ட வகைப்படி | | | | | துறை வகைப்படி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உணவு | உடை | எரிபொருளும வெளிச்சமும | வாடகை | பல்வகைப் பட்ட பொருட்கள் | உள்நாட்டுத் தொகுதி | இறக்குமதித் தொகுதி | ஏற்றுமதித் தொகுதி |
| முக்கியத்துவம் | 100.0 | 61.9 | 9.4 | 4.3 | 5.7 | 18.7 | 60.0 | 35.0 | 5.0 |
| 1968 சராசரி | 121.5 | 121.2 | 120.1 | 103.2 | 102.5 | 133.6 | 123.2 | 117.3 | 142.4 |
| 1969 சராசரி | 130.5 | 127.9 | 130.9 | 124.9 | 108.4 | 147.1 | 134.2 | 123.6 | 148.2 |
| 1970 சராசரி | 138.2 | 136.6 | 137.3 | 136.1 | 109.8 | 153.2 | 142.9 | 129.3 | 157.3 |
| 1971 1ஆம் கால் | 139.1 | 136.4 | 140.9 | 139.3 | 109.8 | 155.8 | 143.9 | 129.2 | 166.2 |
| 2ஆம் கால் | 140.4 | 137.3 | 144.3 | 141.3 | 109.8 | 158.1 | 146.9 | 128.6 | 160.7 |
| 3ஆம் கால் | 141.5 | 138.8 | 146.1 | 141.3 | 109.8 | 160.1 | 149.1 | 128.8 | 152.1 |
| 4ஆம் கால் | 146.5 | 144.7 | 148.5 | 141.3 | 109.8 | 164.1 | 155.9 | 132.0 | 152.7 |
| சராசரி | 141.9 | 139.1 | 145.0 | 140.8 | 109.8 | 159.5 | 148.9 | 129.7 | 157.9 |
| 1970 விட 1971இல் சதவீத அதிகரிப்பு | 2.7 | 1.8 | 5.6 | 3.5 | 0.0 | 4.1 | 4.2 | 0.3 | 0.4 |
| 1972 1ஆம் கால் | 148.1 | 144.8 | 154.2 | 142.8 | 109.8 | 168.9 | 157.7 | 133.9 | 147.2 |
| 2ஆம் கால் | 150.3 | 147.0 | 160.1 | 146.4 | 109.8 | 169.3 | 160.8 | 135.3 | 143.6 |
| 3ஆம் கால் | 152.2 | 148.8 | 168.2 | 146.4 | 109.8 | 169.5 | 164.0 | 137.2 | 128.8 |
| 4ஆம கால் | 153.0 | 149.4 | 171.4 | 148.0 | 109.8 | 170.2 | 164.0 | 137.8 | 143.0 |
| சராசரி | 150.8 | 147.5 | 163.4 | 145.9 | 109.8 | 169.4 | 161.6 | 136.1 | 140.6 |
| 1971ஐ விட 1972 இல் சதவீத மாற்றம் | 6.3 | 6.0 | 12.8 | 3.6 | 0.0 | 6.2 | 8.5 | 4.9 | -11.0 |

மூலம்: தொகை மதிப்புப் புள்ளிவிவரத் திணைக்களமும், இலங்கை மத்திய வங்கியும்.

பொதுவான குறிகாட்டியில் 61.9 சதவீதத்தினைக் கொண்டிருந்த உணவுக்குரிய துணைக் குறிகாட்டியின் பங்கு இவ்வாண்டின் முதலாம் காலாண்டுக்குப் பின் தளராது அதிகரித்தது. சனவரி மாதத்தில் 145.5ஆக விளங்கிய துணைக் குறிகாட்டியானது, காய்கறி, தேங்காய், தேங்காயெண்ணெய் ஆகியனவற்றின் விலை வீழ்ச்சியின் காரணமாக, பெப்புருவரியிலும், மாச்சிலும் வீழ்ச்சியடைந்தது. அதன்பின்னர் துணைக் குறிகாட்டி மேலெழும் போக்கினைக் காட்டியது. நாணய

விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டமையினுல் இறக்குமதிச் செலவு அதிகரித்தமையும், செத்தெல் மிளகாய், வெங்காயம் போன்ற உணவுப் பொருட்களின் விலைக் கட்டுப்பாடுகளை நீக்கியமையும், இறக்குமதியினைத் தடைசெய்தமையும், இவற்றினுல் ஏற்பட்ட பற்ருக் குறையினை உள்ளூர் உற்பத்தியாளர் ஈடுசெய்ய முடியாத நிலையில் இருந்தமையும், உணவுப்பொருள் விலை உயர்வுக்கு முக்கிய காரணங்களாக இருந்தன. காலாண்டுப் பகுதியில் வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்களின் விலை அதிகரிப்பும், மொத்த விற்பனவு வரியினை மேலும் விரிவுபடுத்தியமையுங்கூட விலைகளிலே தாக்கத்தினை ஏற்படுத்தின. இவ்வாண்டுக் காலப்பகுதியில் எலுமிச்சம்பழம், விசுக்கோத்து, பட்டர், பயறு வகை, வேர்க்கொம்பு, பழஊறல் (ஜாம்), மாட்டிறைச்சி, கருவாடு முதலிய பொருட்கள் குறிப்பிடத்தக்க விலை அதிகரிப்பைப் பதிவுசெய்தன.

தேயிலை, மரக்கறி, உடன் மீன், முட்டை, உருளைக்கிழங்கு, வாசனைப் பொருட்கள் முதலியன விலை வீழ்ச்சியினைப் பதிவுசெய்துள்ளன. ஆயினும், இவ்வாண்டின் நாலு காலாண்டுப் பகுதியிலும் தொடர்ந்து அதிகரித்துச் சென்ற துணைக் குறிகாட்டியில் விலை வீழ்ச்சிகள் அதிக தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை.

துணைக் குறிகாட்டிகளுள் 12.8 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்த உடைக்கான துணைக் குறிகாட்டியே பெரும் அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. இக்குறிகாட்டியின் அதிகரிப்புக்கு, உள்ளூர் உற்பத்தித் தொழிலாளர்களுக்குக் கூடிய கூலிகள் கொடுத்தமையும், மூலப்பொருட்களின் இறக்குமதிச் செலவு அதிகரித்தமையும் காரணங்களாகும். சனவரி மாதத்தில் 152.0 ஆக இருந்த துணைக் குறிகாட்டி ஒற்ருேபரில் 171.4 ஆக, கூடிய எண்தொகையினை அடைந்து, பின்னர் நிலையாக இருந்தது. பெரும்பாலும் உடையோடு தொடர்பான எல்லா விடயங்களும் கணிசமான விலை அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. சாரங்கள், சேலைகள், வேட்டிகள் ஆகக்கூடிய விலை அதிகரிப்பினைப் பதிவுசெய்தன.

இவ்வாண்டுக் காலப்பகுதியின்போது, எரிபொருள் வெளிச்சத்துக்கான, துணைக் குறிகாட்டி 3.6 சதவீதத்தினுல் அதிகரித்தது. இவ்வதிகரிப்பானது பெரும்பாலும் சென்ருண்டினைப்போலவே இருந்தது. 1972 மார்ச்சில் மண்ணெண்ணெயினதும், ஏப்பிரலில் மின்சாரக் கட்டணத்தினதும், நவெம்பரில் தீப்பெட்டியினதும் விலைகளினை மேலெழும் நிலையில் மாற்றியமைத்ததன் காரணமாக இவ்வதிகரிப்பேற்பட்டது.

பல்வகை விடயங்கட்கான துணைக் குறிகாட்டி 1971இன் 4.1 அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 6.2 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. யூலையில் ரயர்களினதும், ரியூப்புக்களினதும் விலைகள் மாற்றியமைத்ததனைத் தொடர்ந்து, போக்குவரத்துச் செலவினங்கள் அதிகரித்தன. புகையிலையும் கல்விக்கான பொருட்களும் முறையே நவெம்பரிலும், திசெம்பரிலும் விலை அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. இவ்வாண்டில் வெற்றிலையும் பாக்கும் மட்டுமே விலை வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன.

**(ஆ) நுகர்வோர் விலைக் குறிகாட்டியினுல் உள்ளடக்கப்படாத விலைகள்**

நுகர்வோர் விலைக் குறிகாட்டியினுள் அடங்காத குறிப்பிட்ட சில விடயங்கட்கான விலைத் தரவுகள், கொழும்பு நகரிலுள்ள சில்லறை வியாபாரிகளுடன்

நடாத்திய நேரடி விசாரணை வாயிலாகவும், வெளியிடப்பட்ட வர்த்தக விலைப் பட்டியலிலிருந்தும் பெறப்பட்டுள்ளன. விரிவான பகுப்பாய்வு நோக்கங்களுக்காக, இவ்விடயங்கள் நுகர்வு, நடுத்தர, முதலீட்டுப் பொருட்கள் என்ற பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை II (ஐ) 2

**நுகர்வோர் விலைக் குறிகாட்டியினுள் அடங்காத விலைகள்***

| பொருளின் வகை | சதவீத அதிகரிப்பு 1972/71 |
|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** (நீடித்துழைக்கும் நுகர்வுப் பொருட்கள் உட்பட) | |
| புழுங்கல் அரிசி ... ... ... | 11—17 |
| தகரத்திலடைத்த மீன் ... ... ... | + 8 |
| பழஹறல், ஜெலி, சுவைக்கூட்டு, பசியூட்டும் உணவுவகை ... | 3—23 |
| பற்பசை ... ... ... | 28—43 |
| ரல்கம் பவுடர் ... ... ... | 6—25 |
| ஓடிக்குளோன் ... ... ... | 5—29 |
| சேட்டுக்கள் ... ... ... | 14—50 |
| மெழுகுதிரிகள் ... ... ... | +11 |
| தோல் உற்பத்திகள் ... ... ... | 13—35 |
| கைமின் விளக்கு மின்மப் பெருக்கி மின்கலங்கள் (ரோச்சினதும், ரான் வியஸ்ரினதும் பற்றறிகள்) ... ... | 25—27 |
| மின் விசிறிகள் ... ... ... | +40 |
| தையல் எந்திரங்கள் ... ... ... | +13 |
| மின் குமிழ்கள் (பல்புகள்) ... ... ... | 9—16 |
| மின்சார இணைப்புக்கள் ... ... | 9—12 |
| மோட்டார் வண்டி துணை உறுப்புக்கள் ... ... | 4—37 |
| மோட்டார் வண்டி பற்றறிகள் ... ... | +20 |
| **நடுத்தரப் பொருட்கள்** | |
| தாள் ... ... ... | 24—36 |
| பெற்றோல் ... ... ... | +16 |
| செப்புக் கம்பி ... ... ... | 5+ 9 |
| சோடாத் தூள் ... ... ... | 10—20 |
| சலவைச் சோடா ... ... ... | +12 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | |
| கட்டடப் பொருட்கள் ... ... ... | 4—28 |
| 1. தாங்குகருவி உள்ள கழுவும் கிண்ணம் (வேசின்) (22"x16") உள்ளூர் | +16 |
| தாங்கு கருவியற்ற கழுவும் வேசின் (22"x16") (உள்ளூர்) ... | + 2 |
| 2. கூழ்மட்ட அளவுத் தொகுதி—உள்ளூர் ... ... | + 3 |
| 3. நிலத்தில் புதைக்கப்படும் குழாய்கள் 2''x4'' ... ... | +27 |
| 4. வார்ப்பிரும்புக் குழாய்கள் 6''x4'' (உள்ளூர்) ... | + 5 |
| எந்திரங்கள் ... ... ... | 9—31 |
| இலங்கைக் கோடரிகள் ... ... ... | 24—40 |
| கத்திகள் ... ... ... | + 1 |
| இணைப்புக்கள் ... ... ... | 28—73 |
| மோட்டிஸ் கதவுப் பூட்டுகள் ... ... ... | + 1 |
| விளிம்புப் பூட்டுகள் ... ... ... | +74 |
| செம்புக் கம்பி ... ... ... | 5—10 |
| ஓட்டோ கம்பிகள் ... ... ... | 5— 9 |
| தட்டை இணை ... ... ... | 1—66 |

* பொருட்களின் வகைகளுக்கு எதிராகத் தரப்பட்டுள்ள சதவீத அதிகரிப்புக்கள் அவற்றுற்குரிய பொருட்களின் ஆகக் குறைந்த ஆகக் கூடிய சதவீத அதிகரிப்பினைச் சுட்டிக்காட்டும்.

1971ஆம் ஆண்டிறுதியிலிருந்து 1972ஆம் ஆண்டிறுதிவரையுள்ள காலப் பகுதியிலே தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்களின் விலைகளிலேற்பட்ட சதவீத மாற்றத்தினை அட்டவணை 11 (ஐ) 2 காட்டுகின்றது. இவ்வெண்தொகைகள் ஒரேவகையான பொருட்களின் விலை அசைவுகளைப் பொறுத்தவரையிற் கிட்டிய எண்தொகைகளைக் காட்டும் குறிகாட்டிகளாகக் கருதப்படலாம்.

நுகர்வுப் பொருட்கள்

நுகர்வுப் பொருட்களின் எல்லா விடயங்களும் விலை அதிகரிப்பினைக் காட்டுகின்றன. இதற்கு மூலப் பொருட்களின் விலைகள், கூலிகள், இறக்குமதிகளின் உலகச் சந்தை விலைகள் என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய காரணமாகும். உயர்வான கப்பற் கட்டண வீதங்கள், வெளிநாட்டுச் செலவாணி உரிமைச் சான்றிதழ்கள், மொத்த விற்பனை வரி ஆகியவையும் விலை அதிகரிப்புக்குக் காரணமாக விளங்கின. வெளிச் சந்தையில் சில பொருட்களின் தட்டுப்பாடு, விலையினை அதிகரிக்கச் செய்தன.

மோட்டார் வண்டி உதிரிப் பாகங்களில் ஏற்படுத்தப்பட்ட பற்றுக்குறையும், சேட்டுக்கள், ரோச் பற்றறிகள், பற்பசை ஆகியவற்றின் விலைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமையும், இத்தகைய நுகர்வுப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு ஏனைய காரணங்களாகும்.

சென்றாண்டிலும் பார்க்க, புழுங்கல் அரிசியின் விலை 11 சதத்திலிருந்து 17சதவீதம் வரை ஏறியிறங்கியது.

நடுத்தரப் பொருட்கள்

உள்ளூரிலே தயாரிக்கப்பட்ட நடுத்தரப் பொருட்களின் விலையானது அதிகரித்த உற்பத்திச் செலவினால் உயர்வுற்றது. நடப்பாண்டுக் காலப்பகுதியில் பெற்றோலின் விலை இரண்டு முறை மாற்றியமைக்கப்பட்டது. பெப்புருவரி மாதத்தில் உயர் ரக பெற்றோலின் விலை கலனொன்று ரூ. 5.00 உக்கும், சாதாரண பெற்றோலின் விலை ரூ. 4.80 உக்கும் உயர்த்தப்பட்டது. இவ்விலைகள் திசெம்பர் மாதத்தில் மீண்டும் முறையே கலனுக்கு ரூ. 5.75 ஆகவும், ரூ. 5.30 ஆகவும் மாற்றியமைக்கப்பட்டன. இவ்வாறு பெற்றோலின் விலை மாற்றஞ்செய்யப்பட்டதற்கு, தூய்மையாக்கப்படாத எண்ணெயின் விலை அதிகரிப்பும், கப்பற் கட்டண உயர்ச்சியும் முக்கிய காரணங்களாகும்.

முதலீட்டப் பொருட்கள்

இவ்வாண்டுக் காலப் பகுதியின்போது, அரச உருக்குக் கூட்டுத்தாபனம் அதன் சீராக்கஞ் செய்யப்பட்ட பொருட்கள் பலவற்றின் விலைகளை உயர்த்தியது. ஆயினும் விலை அதிகரிப்புக்கள் கணிசமானவையாக இருக்கவில்லை. மண்வெட்டிகளின் கட்டுப்பாட்டு விலை, மேலெழும் நிலைக்கு மாற்றியமைக்கப்பட்டது. இந்தப் பகுப்புக்குள் அடக்கப்பட்டுள்ள பொருட்களின் விலைத் தளம்பல்களுக்கு, அதிகரித்த உற்பத்திச் செலவுகள் மாத்திரமன்றி, சீமெந்து, கல்நார் (அஸ்பெஸ்ரர் சீற்று) மற்றும் ஏனைய முதலீட்டப் பொருட்கள் என்பனவற்றில் நிலவிய தட்டுப்பாடும் காரணமாயின.

விலைக் கட்டுப்பாடு

இவ்வாண்டுக் காலப்பகுதியின்போது, லாம்பு மாண்டில்கள், கரிசக் காடி (போர்மிக் அசிட்), ஏழு வகையான மருந்துகள் ஆகியன விலைக் கட்டுப்பாட்டுக் குட் கொண்டுவரப்பட்ட சில பொருட்களாகும்.

பின்வரும் பொருட்களின் கட்டுப்பாட்டு விலைகள் மாற்றியமைக்கப் பட்டுள்ளன; அவையாவன, கல்நார், சஸ்ரோஜின், இறக்குமதி செய்யப்பட்ட துணிவகைகள், தூய்மையாக்கப்பட்ட வெள்ளைச் சீனி, லக்ஸ்பிறே, கட்டிப் பால், கொப்பிகள், பயறு வகைகள் ஆகியனவாகும்.

இவ்வாண்டுக் காலப் பகுதியின் போது, பின்வரும் பொருட்களின் விலைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன; அவையாவன, வெங்காயம், செத்தெல் மிளகாய், முள்ளுக்கம்பி, செயற்கைத் துணி, தாள், காட்போட்டு, சயிக்கிள் ரயர்களும் ரியூப்புக்களும், ரோச்சினதும் ரான்சிஸ்ரரினதும், பற்றறிகள், பற்பசை, தீப்பெட்டி, பத்து வகையான மருந்துகள் ஆகியனவாகும்.

**(இ) உள்ளூரிலே தயாரிக்கப்பட்ட பண்டங்களின் மொத்த விற்பனை விலை**

உள்ளூரிலே தயாரிக்கப்பட்ட பண்டங்களில் எடுத்துக்காட்டாகச் சில பொருட்கள் அட்டவணை 11 (ஐ) 3 இல் ஒவ்வொரு பிரிவின் கீழ்க் கொடுக்கப் பட்டுள்ளன. வெவ்வேறு வர்த்தக நிலையங்களில், மொத்தமாக வழங்கல் செய்வோர்களினால் விதிக்கப்படும் விலைகளை இவை குறிக்கா. தயாரிப் பாளரால் அல்லது அவர்களுடைய தனிமுகவர்களால் இடப்பட்ட விலைகளையே குறிக்கின்றன.

புடவைகளும் ஆடைகளும், கைத்தொழில், வர்த்தக விவசாய எந்திரங்களும் துணைச் சாதனங்களும், போன்ற பிரிவுகளிலுள்ள அநேகமான பொருட்களின் மொத்த விற்பனை விலைகள் கணிசமான அதிகரிப்பினைக் காட்டியுள்ளன. சென்றாண்டிற் பெரும்பாலான துணிகள், ஆடைகள் என்பனவற்றின் மொத்த விற்பனை விலைகளில் நிலவிய உறுதித் தன்மை, இவ்வாண்டின்போது செயற்கைத் துணிகளிற் கட்டுப்பாட்டினை நீக்கியதனால் தொடர்ந்திருக்கவில்லை.

கட்டடப் பொருட்களில் முன்பு நிலவிய உயர்ந்த விலைகள், இவ்வாண்டுக் காலப் பகுதியில் ஓரளவு உறுதியான நிலையையடைந்தன. இவ்வாண்டுக் காலப்பகுதியில் வளமாக்கியின் மொத்த விற்பனை விலை சிறிதளவு அதிகரித் திருந்தது.

**2. கூலிகள்**

அரசாங்கத் துறையிலுள்ள தொழில்நுட்ப ஊழியர்கள், எழுதுவினைஞர்கள், சிற்றூழியர்கள், பள்ளிக்கூட ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கான கூலிவீதக் குறிகாட்டிகள் மத்திய வங்கியினாலே தயாரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகுப் பினருக்கும் அளிக்கவேண்டிய ஆகக் குறைந்த சம்பளங்கள், கூலிகள், படிகள்

## அட்டவணை II (ஐ) 3

### உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் மொத்த விற்பனை விலைகள் டிசெம்பர் மாதத்தில் உள்ளவாறு

| | கூறு | தொழிற் சாலை விலை ரூ. 1971 | தொழிற் சாலை விலை ரூ. 1972 | சதவீத மாற்றம் 1972/71 |
|---|---|---|---|---|
| **1. உணவு, பானங்கள், புகையிலை** | | | | |
| சொக்கிளேற்று (பால்) ... | ஒரு டசின் | 10.40 | 12.85 | + 24 |
| சொக்கிளேற்று விசுக்கோத்து ... | ஒரு ரின் | 2.50 | 2.50 | — |
| குடிபானங்கள் (போட்டலோ) ... | ஒரு போத்தல் | 0.40 | 0.40 | — |
| குடிபானங்கள் (சோடா) .. | ,, | 0.20 | 0.20 | — |
| பழச்சாறு (பசோனு) ... | ,, | 5.00 | 5.00 | — |
| பழச்சாறு (வனையவை) ... | ,, | 6.00 | 6.00 | — |
| ஜலண்ட் பிறைட் புகையிலை ... | இறுத்தல் | 58.80 | 61.10 | + 4 |
| திறிறேஸ் சிகரெட்டுக்கள் ... | 1000 | 139.55 | 148.5 | + 7 |
| **2. ஆடை வகைகளும் உடைகளும்** | | | | |
| துணி (எல். டி. எம்.) வெள்ளை ... | யார் | 2.40 | 2.40 | + 9 |
| துணி (எல். டி. எம்.) நிறமூட்டப்பட்டது ... | ,, | 2.40 | 2.40 | — |
| பப்ளின் — வெள்ளை ... | ,, | 2.50 | 2.75 | + 10 |
| வோயில் — அச்சிடப்பட்ட பன்சி ... | ,, | 2.80 | 2.80 | — |
| நூல் 30 கொண்டவை ... | ,, | 4.95 | 5.20 | + 5 |
| சீலை பப்றிக் (அச்சிடப்பட்டவை) 44"/45" ... | ,, | 6.70 | 11.00 | + 64 |
| சேட்டுத் துணி (ரெக்ரோன் பருத்தி) 35"/36" ... | ,, | 8.95 | 15.00 | + 68 |
| உடைக்கான பப்றிக் (நைலோன் சற்றின்) 35"/36" ... | ,, | 6.27 | 10.25 | + 63 |
| சேலை (சீசில்க் பட்டர் நைலோன்) ... | ,, | 10.00 | 10.00 | — |
| சேட்டுத் துணி (சீ சில்க் சில்வர்லைன்) ... | ,, | 9.55 | 12.50 | + 31 |
| காற்சட்டைத் துணி (சீ சில்க்) ... | ,, | 18.40 | 21.50 | + 17 |
| **3. மருந்து வகைகளும் அழகு சாதன தயாரிப்புப் பொருட்களும்** | | | | |
| அஸ்பிறின் குளிகைகள் ... | 1000 | 6.75 | 6.75 | — |
| விற்றமின் 'பி' கொம்பிளக்ஸ் ... | 1000 | 5.90 | 5.90 | — |
| ரெருமைசின் . | 16 கு. போ. | 11.75 | 11.88 | + 1 |
| ஒப்றன் (பல்வகை விற்றமின்) ... | 30 கு. போ. | 6.61 | 6.61 | — |
| டியூறேல் ... | 1 போத்தல் | 4.05 | 4.05 | — |
| பெனிசிலின் 'வி' டியூமெக்ஸ் ... | 500 குளிகைகள் | 69.33 | 14.00 | — 8 |
| சலவைச் சோடா .. | ஒரு மெ. தொன் | 1,720.00 | 2,000.00 | + 16 |
| குளோறின் திராவகம் ... | லோங். தொன் | 2,500.00 | 2,500.00 | — |
| கல்சியம் குளோரைட் ... | லோங். தொன் | 700.00 | 1,500.00 | + 144 |
| **4. தளபாடங்களும் வீட்டுத் தளபாடங்களும்** | | | | |
| அலுவலக மாடம் (உருக்கு) ... | 1 | 635.40 | 760.00 | + 20 |
| உடைமாடம் (உருக்கு) ... | 1 | 795.00 | 955.00 | + 20 |
| கோவை நிலைப் பெட்டி (உருக்கு) ... | 1 | 600.00 | 720.00 | + 20 |

## அட்டவணை II (ஐ) 3

### உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் மொத்த விற்பனை விலைகள் (திசெம்பர் மாதத்தில் உள்ளவாறு)

| | | | | |
|---|---|---|---|---|
| **5. இரும்பும், மின்சாரப் பொருட்களும்** | | | | |
| வட்ட எம். எஸ். உருக்கு ⅞" ... | மெற்றிக் தொன் | 1,930.00 | 1,930.00 | — |
| வட்ட எம். எஸ். கோணங்கள் 1×1×⅛" ... | ,, | 1,980.00 | 1,980.00 | — |
| கட்டும் கறுப்புக் கம்பி ... | ,, | 2,345.00 | 2,135.00 | — 9 |
| முள்ளுக் கம்பி ... | 56 இரு. | 57.25 | 38.50 | — 33 |
| லங்காலோக மண்வெண்டி (7"x10") ... | 1 | 7.90 | 12.00 | + 52 |
| கம்பி ஆணி ... | அந்தர் ஒன்று | 155.00 | 165.50 | + 7 |
| பி. வி. சி. மின்சாரம் பாயாமல் மூடப்பட்ட கம்பிகள் 1/044 ... | 100 யார் | 35.00 | 36.00 | + 3 |
| ஒட்டோக் கம்பிகள் 35/012 ... | ,, | 25.50 | 28.00 | + 10 |
| பொதுவான வெளிச்சங்கொடுக்கும் விளக்குகள் (25. வா.) ... | 1 | 1.93 | 2.07 | + 7 |
| சிறப்பான விளக்குகள் (15 வா.) ... | 1 | 2.00 | 2.15 | + 8 |
| பகல் வெளிச்சம் (60 வா.) ... | 1 | 2.15 | 2.30 | + 7 |
| **6. கைத்தொழில், வர்த்தக, விவசாய இயந்திரங்களும் சாதனங்களும், மோட்டார் வாகனங்களும்.** | | | | |
| லோட்டஸ் ஈருருளி டயர்கள் 28×1½" ... | 1 | 5.35 | 7.15 | + 34 |
| லோட்டஸ் அதிகவரி டயர்கள் 28×1½" ... | 1 | 7.15 | 8.85 | + 24 |
| லோட்டஸ் பொருத்தற்ற டியூப்புக்கள் 26 x 1 3/8 ... | 1 | 3.25 | 3.60 | + 711 |
| தையல் இயந்திரங்கள் 266 எச்/55 (சிங்கர்) ... | 1 | 805.00 | 805.00 | — |
| தையல் இயந்திரங்கள் 237எம்/டபி. (சிங்கர்) ... | 1 | 1,150.00 | 1,380.00 | + 20 |
| மைய வீட்டு நீர்வாங்கு குழாய் ¾" (75/1) ... | 1 | 630.00 | 747.00 | + 19 |
| மைய கைத்தொழில் நீர்வாங்கு குழாய் 1" (140/3) ... | 1 | 1,237.50 | 1,417.50 | + 15 |
| மைய வேளாண்மை நீர்வாங்கு குழாய் 2"(200/ஈ.கே.ஜே.) ... | 1 | 1,440.00 | 1,665.00 | + 16 |
| **7. விவசாய மூலப் பொருட்கள்** | | | | |
| காய்கறிக்கான சிறப்பு வளமாக்கிகள் (இல.1) ... | ஒரு தொன் | 470.00 | 505.00 | + 7 |
| நெல் கலப்புச் சிறப்பு வளமாக்கிகள் ... | ,, | 545.00 | 620.00 | + 14 |
| சாம்பலுப்புக் கலந்த பாசிகை (60%) ... | ,, | 610.00 | 665.00 | + 9 |
| யூறியா ... | ,, | 745.00 | 805.00 | + 8 |
| இரத்த உணவு ... | ,, | 955.00 | 960.00 | + 1 |
| அமோனியாவின் சல்பேற்று ... | ,, | 525.00 | 550.00 | + 5 |
| சுபொஸ் பொஸ்பேற்று ... | ,, | 395.00 | 420.00 | + 6 |
| **8. மர கட்டடப் பொருட்கள்** | | | | |
| 'கொறிகேற்றற் சீற்' ... | ஒரு சதுர அடி | 0.88 | 1.09 | + 24 |
| தட்டை சீற் ... | ,, | 0.55 | 0.66 | + 20 |
| சீமேந்து (காங்கேசன்துறை) ... | அந்தர் ஒன்று | 10.50 | 10.50 | — |
| சீமேந்து (ருகுணு) ... | ,, | 12.00 | 12.00 | — |
| சீமேந்து (புத்தளம்) ... | ,, | 11.25 | 11.25 | — |
| **9. பல்வகைப் பொருட்கள்** | | | | |
| மின்னொளி பற்றறி ... | 1 | 0.58 | 0.71 | + 22 |
| ருன்சிஸ்ரர் பற்றறி ... | 1 | 0.60 | 0.75 | + 25 |
| றேடியோ பற்றறி ... | 1 | 31.50 | 31.50 | — |
| றீம்களிலான எழுதும் தாள்கள் ... | 500 | 9 40 | 9.40 | + — |
| தட்டச்சுக் காபன் 8½"×13" ... | 1 பெட்டி | 13.75 | 13.75 | — |

ஆகியனவற்றை அடிப்படியாகக் கொண்டு இவை அமைக்கப்பட்டுள்ளன. ஆயினும் மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு, ஆண்டு உயர்ச்சிக் கொடுப்பனவுகள் இக் கணிப்பிற் சேர்க்கப்படவில்லை. தனியார் துறையிலுள்ள கூலி நிர்ணயச் சபையினுல் உள்ளடக்கப்பட்ட விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் ஆகியவற்றில் பணியாற்றும் வேலையாட்களின் கூலிவீதக் குறிகாட்டிகள் தொழிற்றிணைக்களத்தினுல் வெளியிடப்படுகின்றன. இக்குறிகாட்டிகள் கூலி நிர்ணயச் சபையினுல் நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கூலியையும், 1967 திசெம்பரிலிருந்து, நாணய மதிப்பிறக்கக் கொடுப்பனவையும் உள்ளடக்கி இருந்தன. இக்குறிகாட்டிகளின் அடிப்படைக் காலப்பகுதி 1952ஆம் ஆண்டாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட குறிகாட்டிகள் உண்மையான உழைப்புக்களை உள்ளடக்கவில்லை. ஏனெனில் மேலதிக வேலை நேரச் சம்பளத்தினையும் தனியார் துறையினரைப் பொறுத்தவரை ஊக்கப்பாட்டுக் கொடுப்பனவு அல்லது மிகையூதியம் போன்ற சிறப்புக் கொடுப்பனவுகளையும் இவை

## அட்டவணை II (ஐ) 4

### அரசாங்க ஊழியர்களின் கூலிவீதக் குறிகாட்டி எண்கள் 1952=100

| | தொழில்நுட்ப எழுதுவினைஞர் தர ஊழியர்கள் | | சிற்றூழியர்கள் | | மத்திய அரசாங்க ஊழியர்கள் (அ) | | அரசாங்கப் பள்ளிக் கூட ஆசிரியர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கூலி வீதக் குறி காட்டிகள் | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி கள் | கூலி வீதக் குறி காட்டிகள் | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி கள் | கூலி வீதக் குறி காட்டிகள் | உண்மைக் கூலிவீதக் குறி காட்டி கள் | கூலி வீதக் குறி காட்டிகள் | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி கள் |
| 1971 1ஆம் கால் ... | 157.2 | 113.0 | 182.9 | 131.5 | 171.3 | 123.2 | 141.1 | 101.5 |
| 2ஆல் கால் .. | 157.2 | 112.0 | 182.9 | 130.3 | 171.3 | 122.0 | 141.1 | 100.5 |
| 3ஆம் கால் ... | 157.2 | 111.1 | 152.9 | 129.3 | 171.3 | 121.1 | 141.1 | 99.7 |
| 4ஆம் கால் ... | 157.2 | 107.3 | 182.9 | 124.8 | 171.3 | 116.9 | 141.1 | 96.3 |
| **சராசரி** ... | **157.2** | **110.9** | **182.9** | **129.0** | **171.3** | **120.8** | **141.1** | **99.5** |
| 1972 1ஆம் கால் ... | 157.2 | 106.2 | 182.9 | 123.5 | 171.3 | 115.7 | 141.1 | 95.3 |
| 2ஆம் கால் ... | 157.2 | 104.6 | 182.9 | 121.7 | 171.3 | 114.0 | 141.1 | 93.9 |
| 3ஆம் கால் .. | 157.2 | 103.3 | 182.9 | 120.2 | 171.3 | 112.6 | 141.1 | 92.7 |
| 4ஆம் கால் ... | 158.2 | 103.3 | 185.2 | 121.0 | 173.0 | 113.1 | 141.5 | 93.5 |
| **சராசரி** ... | **157.4** | **104.4** | **183.4** | **121.6** | **171.7** | **113.8** | **141.2** | **93.6** |
| 1971 இலிருந்து 1972 இல் சதவீத மாற்றம் | + 0.1 | — 5.9 | + 0.9 | — 5.7 | +0.2 | —5.8 | + 0.1 | — 5.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) எழுதுவினைஞர்கள், தொழில்நுட்ப ஊழியர்கள், சிற்றூழியர்களுக்கான குறிகாட்டி.

குறிப்பு: குறிகாட்டிகளாவன 1959 செத்தெம்பர் 30 இல் வேலைக்கமர்த்தப்பட்டோரின் அடிப்படையில் ஒரு நிலையான மதிப்பீட்டிற் கணிக்கப்படுகின்றன. குறிகாட்டிகளைக் கணக்கிடுவதில் பயன்படும் கூலிவீதங்கள், ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட தரங்களுக்குரிய தொடக்கச் சம்பளம், கூலிகள், படிகள் ஆகியவற்றினைக் கொண்டுள்ளன.

உள்ளடக்கவில்லை. உண்மைக் கூலிவீதக் குறிகாட்டிகள், கூலி வீதக் குறிகாட்டிகளை வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டிகளினுற் (கொழும்பு நுகர்வோர் விலைக் குறிகாட்டி) சுருக்குவதன் மூலமே மத்திய வங்கியினுற் கணிக்கப்படுகின்றது.

1971 இனதும் 1972 இனதும் அரசாங்க ஊழியர்களின் ஆண்டு, காலாண்டுக் கூலிவீதக் குறிகாட்டிகளையும், உண்மைக் கூலிவீதக் குறிகாட்டிகளையும் அட்டவணை 11 (ஐ) 4 தருகின்றது. 1971ஆம் ஆண்டுக் காலத்திலும், 1972 நவெம்பர் வரையுள்ள காலப்பகுதியிலும் தொழில் நுட்ப ஊழியர்கள், எழுதுவினைஞர்கள், சிற்றூழியர்கள், பள்ளிக்கூட ஆசிரியர்கள் முதலியோர்களின் கூலிவீதங்கள் மாற்றமுருது நிலையாகவிருந்தன. ஆயினும் வரவுசெலவுத்திட்ட எடுத்துரைப்புக்கு இணங்க, ரூ. 250/- உக்குக் குறைவாக மாதாந்தச் சம்பளம் பெறும் ஊழியர்களுக்கான சிறப்புப் படிக் கொடுப்பனவு காரணமாக 1972 திசெம்பரில் அரசாங்க ஊழியர்களது கூலி வீதங்களில் அதிகரிப்பு ஏற்பட்டது.

இக்குறிகாட்டியினுல் உள்ளடக்கப்பட்ட எல்லா அரசாங்க ஊழியர்களுக்கான 1972இன் கடைசிக் காலாண்டுக்கான கூலிவீதக் குறிகாட்டிகள் முந்திய மூன்று காலாண்டுப் பகுதியிலும் ஏற்படாத அதிகரிப்பினைக் காட்டுகின்றன. மறுபுறம், 1972இன் எல்லாத் துறைகளிலுமுள்ள வேலையாட்களின் ஆண்டுச் சராசரிக் கூலிவீதக் குறிகாட்டிகள் 1971 இன் சராசரியை விடச் சிறிதளவு கூடுதலாக இருந்தன.

அரசாங்கப் பள்ளிக்கூட ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள் ஆகியோர்களது குறிகாட்டிகள் 0.1 சதவீதத்தினுல் அதிகரிக்க, சிற்றூழியர்களது குறிகாட்டிகள் 0.3 சதவீதத்தினுல் உயர்வுற்றன.

தொழில்நுட்ப ஊழியர், எழுதுவினைஞர், சிற்றூழியர்கள், பள்ளிக்கூட ஆசிரியர்கள் ஆகியோர்களது 1972 இன் காலாண்டுகளுக்கான உண்மைக் கூலிவீதக் குறிகாட்டிகள், 1971 இன் தொடர்பான காலாண்டுக் குறிகாட்டிகளை விடக் குறைவானதாகும்.

எல்லாத் தரங்களிலுமுள்ள வேலையாட்களின் உண்மைக் கூலிவீத ஆண்டுச் சராசரி 1971 இனை விட 1972இல் குறைவாகக் காணப்பட்டது. அரசாங்கப் பள்ளிக்கூட ஆசிரியர்களினதும், எழுதுவினைஞர்களினதும் குறிகாட்டிகள் 5.9 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைய, சிற்றூழியர்களுக்கானவை 5.7 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன.

கீழ்க்காணும் அட்டவணை, 1971 இலும் 1972 இலும் தனியார் துறையில் சில குறிக்கப்பட்ட கூலி நிர்ணய சபைகளினுல் உள்ளடக்கப்பட்ட வேலையாட்களின் ஆண்டு, காலாண்டுகளுக்கான ஆகக் குறைந்த கூலி வீதத்தினைத் தருகின்றது.

தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் 1972 இன் காலாண்டினதும், ஆண்டுச் சராசரிக் கூலிவீதக் குறிகாட்டிகள் சென்றுண்டிலும் பார்க்கக் கூடியதாக இருந்தன. விவசாயத்திலுள்ள வேலையாட்களின் ஆண்டுச் சராசரிக் குறிகாட்டி 1971ஆம் ஆண்டுக்கான ஆண்டுச் சராசரியை விட 4.7 சதவீதம்

## அட்டவணை II (ஐ) 5

## கூலிநிருணய சபைக்குட்பட்ட தொழில்களிலுள்ள ஊழியர்களின் குறைந்த மட்டக் கூலிவீதக் குறிகாட்டி எண்கள் (1952 = 100)

| | விவசாயத் தொழிலாளர்கள் (அ) | | கைத்தொழில் வர்க்கத்திலுள்ள தொழிலாளர்கள் (ஆ) | | கூலிநிருணய சபைக்குட்பட்ட தொழிலாளர்கள் (இ) | |
|---|---|---|---|---|---|---|
| | மிகக் குறைந்த கூலிவீதக் குறிகாட்டி | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி | மிகக் குறைந்த கூலிவீதக் குறிகாட்டி | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி | மிகக் குறைந்த கூலிவீதக் குறிகாட்டி | உண்மைக் கூலிவீதக் குறிகாட்டி |
| 1971 1 ஆம் காற்பகுதி | 140.7 | 100.1 | 175.2 | 126.0 | 144.3 | 103.8 |
| 2 ஆம் காற்பகுதி | 140.8 | 100.3 | 175.6 | 125.1 | 144.6 | 103.0 |
| 3 ஆம் கரற்பகுதி | 141.3 | 99.9 | 175.7 | 124.2 | 145.1 | 102.1 |
| 4 ஆம் காற்பகுயி | 143.5 | 98.0 | 178.1 | 121.5 | 147.2 | 100.5 |
| சராசரி | 141.9 | 99.8 | 176.1 | 124.2 | 145.3 | 102.0 |
| 1972 1 ஆம் காற்பகுதி | 145.6 | 98.3 | 180.5 | 121.9 | 149.2 | 100 |
| 2 ஆம் காற்பகுதி | 146.3 | 97.3 | 181.1 | 120.5 | 149.8 | 99 |
| 3 ஆம் காற்பகுதி | 148.5 | 97.6 | 181.9 | 119.5 | 152.0 | 99 |
| 4 ஆம் காற்பகுதி | 153.6 | 100.3 | 182.5 | 119.3 | 156.5 | 102.3 |
| சராசரி | 148.5 | 98.4 | 181.4 | 120.3 | 156.9 | 100.7 |
| 1971இல் இருந்து 1972 சதவீத மாற்றம | + 4.7 | — 1.4 | + 3.0 | — 3.1 | + 8.0 | — 1.3 |

மூலம்: தொழிற்றிணைக்களமும, இலங்கை மத்திய வங்கியும்.

அ. தேயிலை வளர்ப்பும் அதன் தயாரிப்பும், றப்பர் வளர்ப்பும் அதன் தயாரிப்பும், தெங்கு வளர்ப்பும் ஆகிய துறைகளை மட்டும் உள்ளடக்கும்.

ஆ. தெங்குப் பொருட்கள் உற்பத்தி, பொறியியல், அச்சடித்தல், தீப்பெட்டி உற்பத்தி வாகனப் போக்குவரத்து கப்பற்றுறைமுகம், துறைமுகப் போக்குவரவு, தேயிலை ஏற்றுமதி, றப்பர் ஏற்றுமதி, திரைப்படம், கட்டடம் என்னும் துறைகளை மட்டும் உள்ளடக்கும்.

இ. விவசாயம், கைத்தொழில் வர்த்தகம் ஆகிய துறைகளிலுள்ள தொழிலாளர்களின் இணைந்த குறி காட்டிகள்.

அதிகரிப்பைப் பதிவுசெய்தது, 1972இன் சராசரி 148.5 ஆக விளங்கியது. கைத்தொழிலும் வர்த்தகத்திலும் பணியாற்றும் தொழிலாளர்களின் சராசரிக் கூலிவீதக் குறிகாட்டியானது 1971 இலிருந்த 176.1 சதவீதத்திலிருந்து, 1972இல் 3.0 சதவீத அதிகரிப்பினைக் காட்டி, 181.4 சதவீதமாகக் காணப்பட்டது.

1968ஆம் ஆண்டின்[1] 40 ஆம் இலக்க ஊழியர்களுக்கான இடைக்கால நாணய மதிப்பிறக்கப் படிகள் சட்டத்தின் பிரிவு 4 (1) இற்கு இணங்க

1. இச்சட்டத்தின் கீழ், 1967 திசெம்பர் பெறுமதியில் நிலையாக்கப்பட்டபடி ஊழியர்களுக்கு நாணய மதிப் பிறக்கப்படியும் வாழ்க்கைச் செலவுப்படி அல்லது சிறப்புப் படியும் வழங்கப்படுகிறது. இச்சட்டத்தின்படி, வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியின் அடிப்படையில் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி அல்லது சிறப்புப்படி இச்சட்டத்தின் கீழே வழங்கப்படும் மொத்தப் படிகளை விட அதிகரிக்குமாயின் இவ்வதிகரிப் புக்கு உரித்துடையவர்களாவர்.

விவசாயத்திலும் கைத்தொழில் வர்த்தகத்திலும் பணியாற்றும் ஊழியர்களுக்கும், கூலி நிர்ணய சபை உள்ளடக்கும் தொழிலாளர்களுக்கும் மேலதிகப் படிகள் வழங்கப்பட்டதன் காரணத்தினுல் குறிப்பாக 1972 இன் 3ஆம் காலாண்டுப் பகுதியிற் குறிகாட்டிகள் அதிகரித்தன.

1972 ஆம் ஆண்டில் விவசாயம் கைத்தொழில், வர்த்தகம் ஆகியவற்றிலும் கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலும் பணியாற்றும் வேலையாட்களின் உண்மைக் கூலி வீதக் குறிகாட்டியின் ஆண்டுச் சராசரி முறையே,1.4 சதவீதம்,3.1சதவீதம், 1.3 சதவீதம் ஆகியவற்ருல் வீழ்ச்சியடைந்தன.

றப்பர் ஏற்றுமதி, மோட்டார், போக்குவரத்து, பொறியியல், அச்சிடுதல், தேயிலை ஏற்றுமதிகள், தும்பு மெத்தைகள், சிலிர்த் (பிறிஸ்ரல்) தும்பு ஏற்றுமதி வர்த்தகம் ஆகிய தொழில்களிலுள்ள உடல் உழைப்புத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் 1971 யூலையில் கூட்டு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இவ்வுடன்படிக்கையானது கைத்தொழிற் தகராறுகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 25 வேலையாட்களுக்குக் குறையாத எண்ணிக்கையுள்ளோரை வேலைக்கமர்த்தியுள்ள இவ்வர்த்தகத் துறை சார்ந்த எல்லா வேலை கொள்வோரையும் உள்ளடக்கும் முறையில், கைத்தொழில் அமைச்சினுல் ஒரு கட்டளைச் சட்டம் 1972–02-01 இற் பிறப்பிக்கப்பட்டது. ஊதிய உயர்வு அளவுத் திட்டத்தின் அடிப்படையில் திரட்டிய மாதாந்தக் கூலிகள் வழங்கல், ஊ. சே. நி. ஏற்படுத்துவதற்கு முந்திய காலப்பகுதிக்கான பணிக்கொடை வழங்கல், தொழிற்சங்க ஊழியர்கள் சம்பளப்பட்டியலில் தம் உறுப்புரிமைக் கட்டணத்தினைக் கழிக்கும் உரிமை வழங்கல்,மிகை ஊதியம் வழங்கல், தகராறுகளும் ஒழுங்கு நடவடிக்கைகளும் ஆகிய முக்கிய அம்சங்களை இவ்வுடன்படிக்கை கொண்டுள்ளது.

செங்கட்டிகள் ஓடுகள் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் ஆகக் குறைந்த கூலி வீதம் நாளொன்றுக்கு ரூ. 1.35 கொண்ட அதிகரிப்புடன் திரட்டிய அடிப்படையில் அமைக்கப்பட்டது. சுருட்டுத் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள கூலியாட்களுக்கான ஆகக்குறைந்த துண்டு வீதக் கூலிகளும் நாளொன்றுக்கு 2 ரூபாவால் 1972.04.01 தொடக்கம் அதிகரிக்கப்பட்டன.

கம்பளி உற்பத்தி வணிகத்தில் ஈடுபட்டுள்ள வேலையாட்களுக்கு 1972.07.01 இலிருந்து 50 சதத்தினுல் ஆகக் குறைந்த திரட்டிய கூலிகள் அதிகரித்துக் கொடுக்கப்பட, புகையிலை வர்த்தகத்தில் உள்ள வேலையாட்களுக்குப் பின்வரும் வகையில் அதிகரிப்புகள் ஏற்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| ஆண் வேலையாட்கள் | ... | 90 சதம் | நாளொன்றுக்கு |
| பெண் வேலையாட்கள் | ... | 70 சதம் | நாளொன்றுக்கு |
| சிறுபராய வேலையாட்கள் | ... | 50 சதம் | நாளொன்றுக்கு |

மேற் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுடன், புகையிலை வர்த்தகத்துக்கான கூலி நிர்ணய சபையானது தொழிலாளர்களுக்கு நன்மையளிக்கும் பொருட்டு 9 பொது விடுமுறைகளை வழங்கியது.

1972 ஒற்ருேபர் 27 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க, 1972 நவெம்பர் 1ஆந் திகதி தொடக்கம் தீப்பெட்டி உற்பத்தி வணிகத்தில் ஈடுபட்டுள்ள இளம் வேலையாட்களுக்கும் காவலாளிகளுக்கும் பொருத்தமான ஆகக்குறைந்த கூலிவீதம் அதிகரிக்கப்பட்டதோடு திரட்டியும் அமைக்கப்பட்டது.

1972 நவெம்பர் 1ஆந் திகதி தொடக்கம் தெங்கு வளர்ப்பு கூலி நிர்ணய சபையானது நன்மையளிக்கும் பொருட்டு விடுமுறை நாட்களை இரண்டு நாட்களிலிருந்து நாலு நாட்களுக்கு உயர்த்தியது.

மேலும் 1972 இன் ஒழுங்கு விதி இலக்கம் 1 (பெருந்தோட்ட வேலையாட்கள் மேலதிகச் சிறப்புப்படி) அவசரகாலச் சட்டப் பிரிவு 4 இன் கீழ் 1972 நவெம்பர் 1 இலிருந்து பெருந்தோட்டப் பிரிவிலுள்ள வேலையாட்களுக்கு இடைக்காலச் சிறப்புக் கொடுப்பனவுகளாக அதிகரித்த கூலிகள் வழங்கப்பட்டன. கூலியாட்கள் பின்வரும் அடிப்படையிற் பெற்றனர்.

| | | |
|---|---|---|
| ஆண் வேலையாட்கள் | ... | 18 சதம் நாளொன்றுக்கு |
| பெண் வேலையாட்கள் | .. | 12 சதம் நாளொன்றுக்கு |

சினிமா கூலி நிருணய சபையானது, 1972 நவெம்பர் 1 தொடக்கம் முகாமையாளர்களுக்கும் உதவி முகாமையாளர்களுக்கும் புதிய கூலி அமைப்பு முறைகளை வகுத்தது. மாநகரசபை வட்டாரத்தினுட் பணிபுரியும் முகாமையாளருக்கும், உதவி முகாமையாளருக்கும் முறையே மாதாந்தம் ரூ. 450.00, ரூ. 285.00 வீதம் வழங்கப்பட்டது. மாநகரசபை எல்லைக்கு வெளியேயுள்ளவர்களுக்கு முறையே ரூ. 300.00, ரூ. 225.00 மாதாந்தம் வழங்கப்பட்டது.

நிதியமைச்சர் தனது வரவுசெலவுத்திட்டத்தில், அரசாங்க சேவை, அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றில் மாதாந்தச் சம்பளம் பெறும் ஊழியர்கள் ரூ. 180/- ரூபாய்க்குக் குறைவாகச் சம்பளம் பெறும் (எல்லாம் உட்பட) ஊழியர்களைப் பொறுத்தவரையில் 1972 திசெம்பர் 1 தொடக்கம் அவர்களது மாதாந்தச் சம்பளம் ரூ. 180/- ஆக அமையும் முறையில் அவர்களுக்கு ஒரு சிறப்புப் படி வழங்கப்படுவதுடன், இம்மாதாந்தச் சிறப்புப் படி ஆகக்குறைந்தது ரூ. 7.50 ஆக இருக்கும். அவ்வாறு ரூ. 180/- — ரூ. 250/- (எல்லாமுட்பட) என்ற பகுதிக்குள் அடங்கும் கூலி / சம்பளம் பெறும் ஊழியர் சிறப்புப்படியாக மாதாந்தம் ரூ. 7.50 பெறுவர். ஏறக்குறைய ரூபா 250உக்கும் ரூபா 257.50 உக்கும் இடைப்பட்ட வருமானம் பெறுவோருக்கு ஓர் எல்லை வேறுபாட்டுத்தொகை வழங்கப்படும். மாதாந்தச் சம்பளம் பெறும் 320,000 வேலையாட்கள் இவ்வொழுங்கினுல் நன்மை பெறுவார்களென மதிப்பிடப்பட்டுள்ளது.